செ.வெ.எண்:14/அக்டோபர்/2020 நாள்:05.10.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-------------------

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் பணியிடம் பூர்த்தி செய்யும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 20.03.2020 அன்று காலை 10.00 மணி முதல் 19.04.2020 அன்று பிற்பகல் 05.45 மணி வரை விண்ணப்பங்கள் பெற அறிவிக்கை வெளியிடப்பட்டது.

கொரோனா (Covid - 19) பொது முடக்கத்தின் காரணமாக விண்ணப்பம் அளித்திட மேலும் 15 நாட்கள் காலநீட்டிப்பு செய்து 05.10.2020 அன்று காலை 10.00 மணி முதல் 20.10.2020 மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஏற்கனவே, விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**